

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 18.03.2025 | கோவை வடக்கு | தொண்டாமுத்தூர் | சுண்டக்காமுத்தூர், சுகனாபுரம் பகுதி, கோவை | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, இம்ரான் கான் |
| 2 | 18.03.2025 | கோவை மாநகர் | சிங்காநல்லூர் | சௌரிப்பாளையம், பீளமேடு | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, தக்ஷிதா |
| 3 | 19.03.2025 | மதுரை வடக்கு | மதுரை கிழக்கு | பேருந்து நிலையம் அருகில், ஆனையூர் | **திண்டுக்கல் லியோனி,** சி.ராஜபாரதி |
| 4 | 19.03.2025 | ஈரோடு மத்திய | பெருந்துறை | காஞ்சிக்கோயில் | இந்திரகுமார் தேரடி, ரா.அபிநயா |
| 5 | 19.03.2025 | விழுப்புரம் வடக்கு | திண்டிவனம் | கூனிமேடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ச.ஷாநவாஸ் |
| 6 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 7 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை! செம்பனார்கோவில் ஒன்றியத்தில்

# சமுதாய வளைகாப்பு! 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசைகள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

மயிலாடுதுறை, மார்ச் 18 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாத்தனூரில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாத்தனூரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஹெச்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, தாம்பூலத்தில் புடவை, மங்கலப்பொருட்கள், பூமாலை, வளையல், இனிப்பு, ஐந்து வகையான சாதம் ஆகியவை அடங்கிய சீர்வரிசைகளை வழங்கி பேசுகையில்,

முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடும், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களோடும், மயிலாடுதுறை மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழாவானது, எதிர்காலத்தில் ஒரு வளமான இளைய சமுதாயத்தை உருவாக்கித் தரப்போகின்ற பெண்களுக்காக நடைபெறும் சிறப்புமிக்க விழாவாகும்.

இன்றைய தினம் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, சமுதாய வளைகாப்பு விழா மிகுந்த ஆரவாரத்தோடும், மகிழ்ச்சியோடும், கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தைப் பொறுத்தவரை, இத்திட்டத்தின் மூலம், கர்ப்பிணிப் பெண்களுகளுக்கு பேறுகாலத்தின் போதும், பேறுகாலத்திற்கு பின்னரும், தாய்மார்களும் அவர்களின் குழந்தைகளும் சத்தான உணவுப்பொருட்களை உட்கொண்டு ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முதன் முதலில் பேறுகால உதவித்தொகையாக ரூ.6000 உதவித்தொகையை முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பேறுகால உதவித்தொகையாக ரூ.18000 வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இத்திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை மாவட்டத்தில் 3296 கர்ப்பிணிப் பெண்களும், 2620 பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெற்று வருகிறார்கள். பெண்கள் கர்ப்பமடைந்நது முதல் தொடர்ந்து வரும் 1000 நாட்கள் மிகவும் பொன்னான நாட்களாகும். எனவே இவ்விழாவில் கலந்து கொண்டுள்ள கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும், தங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் உங்கள் குழந்தையின் வளர்ச்சியும் மிகவும் ஆரோக்கியமானதாக அமையும். " மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா!" என்ற கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் வார்த்தைகளுக்கேற்ப, பெரும் தவத்தின் பயனாய் மங்கையராய் பிறந்த நீங்கள், அடுத்து நாமெல்லாம் பெற்றிருக்கக் கூடிய உறவுகளிலேயே மிக உயர்ந்ததான "தாய்" என்ற பொறுப்பிற்கு வர இருக்கிறீர்கள்.

உலகில் நாம் யாரை எந்த உறவு சொல்லி அழைத்தாலும், அவற்றையெல்லாம் விட உயர்ந்ததும், மதிப்பு மிக்கதுமான தாய்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு பயனுள்ள திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் நடைபெறும் இந்த சமுதாய வளைகாப்பு விழாவில் பங்கேற்றுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவருக்கும், முதலமைச்சர் தளபதி அவர்கள் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

இவ்விழாவில் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், இலக்கிய அணி மாவட்ட துணைச் செயலாளர் சௌமியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர்கள் பி. எம். அன்பழகன், எம். அப்துல் மாலிக் ப.முருகமணி செல்ல சேது ரவிக்குமார், பஞ்சு. குமார், ஏ .ஜி . ஜெ. பிரபாகர், மயிலாடுதுறை நகர்மன்றத் தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்செண்ட், பி.கொன்னடி, பி.சிவதாஸ், ஜெ கபிலன், வழக்கறிஞர் தணிகை பழனி, தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுணசங்கரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் மெர்லின் அன்னமலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலர் கிருத்திகா மற்றும் ஒன்றிய,கிளை கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் சார்பில் 08 மகளிர் விடியல் பயண புதிய BSVI நகரப் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.





புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி கீரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி இளைஞரணி தி.மு.க. சார்பில், இந்தித் திணிப்பு,தொகுதி மறுவரையறை, தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசினைக் கண்டித்து, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையிலும், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் வரவேற்புரையிலும் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன், தலைமை கழக இளம் பேச்சாளர் சே.கார்த்திக் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.